
உ
சிவமயம்




# மாவிட்டபுரம்
# அமரர்
# கந்தையா நல்லதம்பி
## அவர்களின்
## சிவபதப்பேறு குறித்த
# நினைவு மலர்

23.09.1996

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



தாயின் கரத்தில்: 1935

தாய் மண்ணின் கரத்தில்: 23*8*1996

# சிவபதமெய்திய
# உயர்திரு. கந்தையா நல்லதம்பி
# அவர்கள்

## திதிவெண்பா

ஆயபுகழ்த் தாத்ருவருடத் திருபத்திமூன்றாம் நாள்
நாயநிலை தொடவளர்பிறைத் தசமிசேர் வெள்ளியில் — காயம்
களைந்த மாவையம்பதிவாழ் **கந்தையா நல்லதம்பி**
கருணைவள்ளல் பாதமடைந்தான் சென்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்





# சமர்ப்பணம்

இல்லறத்தை நல்லறமாய் ஒளிவிளங்க ஒளிர்வித்த எங்கள் அப்பா, எம்குடும்பத் தனித் தலைவர், நாம் வணங்கும் பெரும் தெய்வம் நல்லதம்பி என்னும் பெயருடைய எங்கள் ஒப்பில்லாக் குணக் குன்று பொய்யான மெய்கேட்டு மெய்யாகி எம்மை விட்டு பிரிந்து சிவன் சேவடியைச் சேர்ந்து விட்டார். அவர் செய்த நன்றியையும் பேராவெம் அன்பினையும் சற்றேனும் குறையாது அழியாது நலம் செய்யப் பொன்னெழுத்தால் பொறித்தவிந்த வாடாத பொன் மலரை அவர்பாதக் கமலத்தில் ஆர்வமுடன் சூட்டி மனதின் ஆறாத்துயராற ஆண்டவனைத் தொழு கின்றோம்.

**மனைவி, பிள்ளைகள், மருமகன்,**
**பேரப்பிள்ளைகள்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



## விநாயக வணக்கம்

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் தன்மையினால்
கண்ணிற் பணிமின் கனிந்து.

---

### அருள்வாக்கு

மானிடனே!
மகேஸ்வரன் விரும்புவது, நின்
மகத்தான படையலோ!
மதிப்பற்ற பொருட்குவியலோ அல்ல
மனத்தினுள் அவன் நாமம் சொல்லி, நல்
மனிதத்தை மதிக்கும் மனிதனை.

---


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



## தேவாரம்

பாடியாடு மெய்ப்பத் தர்கட்
        கருள்செயு முத்தினைப் பவளத்தைத்
தேடிமாலயன் காணவொண்
        ணாதவத்திரு வினைத்தெரிவைமார்
கூடியாட வர்கைதொழு
        கோட்டூர் நற்கொழுந்தேயென்றெழுவார்கள்
நீடு செல்வத் தராகியிவ்
        வுலகினினிகழ் தருபுகழாரே.

## திருவாசகம்

பாரொடு விண்ணாய்ப் பரந்த எம் பரனே
        பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய் சிவபுரத்தரசே
        திருப்பெருந்துறையுறை சிவனே
ஆரொடு நோகேன் ஆர்க்கெடுத் துரைப்பேன்
        ஆண்ட நீ அருளிலை யானால்
வார்கடல் உலகில் வாழ்கிலேன் கண்டாய்
        வருக என் றருள்புரி யாயே.

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியை
        கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
        மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்ற எம் சிவனைத்
        திருவீழி மிழலை வீற் றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டுகண் டுள்ளம்
        குளிர என் கண்குளிர் ந்தனவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

பாலுக்கு பாலகன் வேண்டி யழுதிடப்
பாற்கடல் ஈந்த பிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்
மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற தில்லைச்
சிற்றம் பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல் லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

சென்ற காலத்தின் பழுதிலாத் திறமும்
இனியெதிர் காலத்தின் சிறப்பும்
இன்றெழுந் தருளப் பெற்ற பேறிதனால்
எற்றைக்கும் திருவருளுடையோம்
நன்றியில் நெறியில் அழுந்திய நாமும்
நற் றமிழ்வேந்தனும் உய்ந்து
வென்றி கொள்திரு நீற்றொளியினில் விளங்கும்
மேன்மையும் படைத்தனம் என்பார்.

## திருப்புகழ்

முத்தைத்தரு பத்தித் திருநகை
அத்திக்கிறை சத்திச் சரவண
முத்திக்கொரு வித்துக் குருபர எனவோதும்

முக்கட்பர மற்குச் சுருதியின்
முற்பட்டது கற்பித் திருவரும்
முப்பத்துமு வர்க்கத் தமரரும் அடிபேணப்

பத்துத்தலை தத்தக் கணைதொடு
ஒற்றைக்கிரி மத்தைப் பொருதொரு
பட்டப்பகல் வட்டத் திகிரியில் இரவாகப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்தற்கிர தத்தைக் கடவிய
பச்சைப்புயல் மெச்சத் தகுபொருள்
பட்சத்தொடு ரட்சித் தருள்வதும் ஒருநாளே

தித்தித்தெய ஒத்தப் பரிபுர
நிர்த்தப்பதம் வைத்துப் பயிரவி
திக்கொட்கந டிக்கக் கழுகொடு கழுதாடத்

திக்குப்பரி அட்டப் பயிரவர்
தொக்குத்தொகு தொக்குத் தொகுதொகு
சித்ரப்பவு ரிக்குத் த்ரிகடக எனவோதக்

கொத்துப்பறை கொட்டக் களமிசை
குக்குக்குகு குக்குக் குகுகுகு
குத்திப்புதை புக்குப் பிடியென முதுகூகை

கொட்புற்றெழு நட்பற் றவுணரை
வெட்டிப்பலி யிட்டுக் குலகிரி
குத்துப்பட ஒத்துப் பொரவல பெருமாளே.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# வாழ்நாள் நயப்புப் பாக்கள்

அலைவந்து ஆர்ப்பரித்து அழகாகத் தாழமிட
அதுசென்று அங்குள்ள கவிஞர்கள் உயிரோடாடி
கலையினுக்குத் தூபமிடக் கவலை பறந்தோட
களிகொண்டு மனமாடக் கவியெழுதி நின்ற
நிலைமாறி நிஜங்களுருமாறி நிம்மதி தேடி
நித்தம் அலையாய் அலைந்தோடிக் குடும்பத்திருந்து
குலைந்து குவலயம் எங்குமுழன்ற போதிலும்
குறையாத பண்போடு வாழவைத்த ஈழத்தின்

மகத்தான ஊரென்று மாற்றோரெல்லாம் கூறும்
மாவிட்டபுரம் தன்னில் கந்தையாவும் சிதம்பரமும்
அகத்தால் இணைந்து அமைத்த குடும்பத்தில்
ஆண்டவன் மகிழ்ந்தளிக்க மண்ணில் பெற்றோர்
முகந்தலர முருகேசுடன் பகவதி, தனலட்சுமி
மூவரையும் தொடர்ந்து அன்னலட்சுமி நல்லதம்பியுடன்
சுகந்தம் பரப்ப சொக்கலிங்கத்துடன் பேரம்பலமெனும்
சிறந்த செல்வங்கள் அடைந்து மகிழ்ந்தனர்.

உதித்த செல்வங்கள் உருமாறிப் பருவத்தின்
உச்சிப் படியினை மிதிக்கக் கண்டதாய்
பதித்தவன் நெஞ்சிலதைப் பதித்து நிற்கப்
பதியவன் துணைதேடப் பலவூர் நடந்தேற
விதிவழி விவாகங்கள் பொருந்திக் கைகூட
வழிதிறந்து வாயில் வந்த நல்லதம்பிக்கு
அதிகர் கூடியாராய்ந்து ஆறுமுகம் இரத்தினேஸ்வரியை
அகமுடையாள் ஆக்கியகம் மகிழ்ந்து நின்றனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுருள்குழல், சிவந்தஇதழ் பரந்த உடலுடனும்
சுருதி குலையாது சுகமாய்ப் பாடியவன் அணுக
மருள்விழி மான்போன்ற மங்கை மயங்கி
மன்னன் மார்மீது சாயமகள் பத்மாவதி
சுருள்குழல் கொண்டு சுந்தரியாய் உதித்து
சுகந்தம் பரப்பமகிழ்ந்த குடும்பத்திற்கு அவன்
அருள்பொழிய வழகுமலர் பத்மராணியுடன் தர்மராஜா
இவன்வழிதர்ம பாலன்வதனி லதாவென மலர்ந்தனர்

மலர்ந்த செல்வங்கள் மதிவளர்ந்து தம்பதியுயர
மனம் நினைந்து நினைந்துழைத்த மாமனிதனுக்கு
உலர்ந்தது கரங்கள், உதித்தமக்கள் கல்வியில்
உயர்ந்து வளரப்பார்த்த தந்தை முகம்
மலர்ந்து ஒளிவீசும்காலம் மூத்தமகளும் இணைந்துழைத்து
மற்றவர் கல்விக்குதவ குடும்பம் நாளுக்குநாள்
அலர்ந்து பொலிய அருமைமகன்மார் இருவரும்
அன்னிய நாட்டிலடிபதிக்க அயலவரதிர்ந்து நின்றனர்

உறுதுணையாய் உழைத்த மகளுக்கு தந்தையார்
ஏற்றவொரு துணைதேடி பாலசுப்பிரமணியத்தை
இணைத்து வறுமையில்லா வாழ்விற்கு வழிசமைத்து விடவே
வதுவை அவள் வந்தவன்வழி பெருகவுடணிணைந்து
பொறுமையுடன் நடந்து பிறந்தவிடத்திற்குப் பெருமைதேட
பிறந்தபேரன் பிரசாந்தன் முகம் பார்த்து
முறுவலிக்க முன்னென்றும் காணாதசுகத்தில் தாத்தா
மூவுலகையும் மறந்தாடிப் பாடி மகிழ்ந்தார்

சூரியக்கதிர் படையனர்த்தத்தால் அன்புக் கூடழிந்து
சோகத்தீயிலெரிந்து சுற்றம் மறந்து சுகமிழந்து
ஆரியவம்சம் அகன்று வரவேவன்னி மண்ணிற்கு
அன்புக்குடும்பம் யாழில்லகப்பட்டது, அகலவழி ஏதும்
தெரியாது அழுதார் அரிவையரை எண்ணித்
தரியாமனத்துடன் தலைநகரில் பணம் பெற்று
அரிகரநாமத்துடன் அடுத்துவருவேன் பணத்திற்கென்று சென்று
ஈழத்தில் தன்கூடகற்றி தம்பிரானுடன் கலந்தார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனைவியின் மனத்தவிப்பு

வேகுதே என் நெஞ்சு
வெந்து பொடியாகுதே
நோகுதே என் உடல்
நொந்து புண்ணாகுதே - அன்றி
ஆறுதே இல்லை மனம், ஐயா!
நீ மறைந்தபின்

திலகம் விலகுதே- என்
தாலி அறுகுதே
பொட்டும் அழியுதே - என்
பொலிவும் குறையுதே
ஏனோ! விதவை
என்றபட்டம் மட்டும்
என்னை நோக்கி வருகுதே!

ஐயோ! ஏகுமிடம் எங்கும்
நின் உருவம் தெரிய
ஆகுதியாய் என்னுணர்வுகள்
நின்னுள் மறைய, எழும்
ஆகுலம் நீக்கி இவ்வபலைக்கு
அபயம் கொடுக்க வாருமையா!

## ஆண்பிள்ளைகளின் மனத்தவிப்பு

பெற்றெடுத்து எமக்குப் பெயருமிட்டு
பேரன்புடன் பேணி வளர்த்துப்
பற்றுடனே பலபணியும் செய்தெம் உயிரினைப்
பாதுகாக்க வெளிநாடும் அனுப்பிவிட்டு
சற்றேனும் ஓயாது சலிப்பும் அடையாது
செய்கருமம் சீரேசெய்த, நின்மனமாற
பற்றுடன் நாம் செய்தது ஒன்றுமில்லை, நின்
வெற்றுடல்காவித் தீயூட்ட முடியாத
அற்றம் அறிந்தாவிவவ்வினானே காலன் அங்கே
அறிந்து அழுகுதே நின் பிள்ளைகள் இரண்டிங்கே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெண்பிள்ளைகளின் மனத்தவிப்பு

ஊரும் இல்லை உறவும் இல்லை
உன்னருமைப் பெண்கள் எமக்கினியாரும் இல்லை
கூறுகெட்ட கொடியவர் படை எமை
கொன்று தின்றாலும் கேட்கவொரு நாதியில்லை
தெரிந்தும் நீ எமைப்பிரிந்து தனிவழி
போவது நியாயம் இல்லை
தந்தையே நீ நின்வழிமாற்றி
வந்தெமைக் காத்து நிற்கமாட்டாயோ!

## சகோதர சகோதரிகளின் மனத்தவிப்பு

மேலகன்று உயர்ந்து ஓங்கி
மேவுபல கிளையோச்சி மிளிர்ந்து யார்க்கும்
கோலநிழல் விரிக்கின்ற குளிர் ஆலின்
பெருவிழுதாய்க் குலவி நின்ற
சீலமிகு செல்வமே நல்லதம்பி
நின்நினைவைச் சிதைப்பதற்கோ
காலன் இடைவந்தான் கடவுளும்
காணவில்லையோ காலால் உதைப்பதற்கு.

## மருமகன் மனத்தவிப்பு

மகள் எடுத்து நின்வாசல்
அடியெடுத்து வைத்த நாள் முதல்
எந்தையாய் நினைத்தேன் அன்றி
ஏதொன்றும் நினைத்ததில்லை

விந்தையாய் இருக்கும் நின்னாவி
விலகிய கதை பொய்யாகி என்றும்
தந்தையாய் இருந்தெம்முடன்
தரணியில் வாழமாட்டீரா!

## பேரர்களின் மனத்த்விப்பு

ஓடிநாம் வந்துன்
மடிமீதிருந்து நிதம்
தாடியினைக் கோதி
தாத்தாவுனைக் கொஞ்ச - எம்மைப்
பாடி மகிழ்வித்த நின்னை
பார்த்திட வேண்டும் வாராயோ!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேற்றம்

துறந்தது ஊனுடலென்ற உண்மையை மறந்து
துயரிற்குத் தூபமிட்டுத் துஞ்சாதிவ் உலகில்
பிறந்தவர் யாவரும் இறப்ப துறுதியெனும்
பெற்றியை அறிந்ததன் வழி நின்று
இறந்துபட்டான் என்ற இழிசொல் மறந்து
இறைபணி செய்து இறைஞ்சிய நல்லதம்பி
உறங்குகிறான் உலகத்தலைவன் காலடியில் என்ற
உண்மையை உணர்ந்து மனம் ஆறுவீரே!

**சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**

## நன்றி நவிலல்

சிவபதமெய்திய எங்கள் குடும்பத் தலைவர்

**திரு. கந்தையா நல்லதம்பி**

அவர்களின் மறைவு குறித்து,
எம்மை ஆற்றியும் தேற்றியும் வந்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும், அன்னாரின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும், ஆத்மசாந்திக் கிரிகைகளில் பங்குபற்றிய அனைவருக்கும், இம்மலரை ஆக்க உதவிய திரு. கருணா அவர்களுக்கும், இம்மலரை அழகுற அமைத்துத்தந்த சங்கர் அச்சகத்தினருக்கும்

எங்கள் ஆழ்மனதின் அடித்தளத்தில் இருந்து
நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இங்ஙனம்
அன்னாரின் குடும்பத்தினர்

Mr.N. Tharmapalu
1455 William Sport Dr. # 306
Mississauga, Ont.
L4I 2T5
Canada.


Mr. N. Tharmarajah
Zurich
8172 Niederglatt
Swiss.

23.09.1996



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவளி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அகர முதல எழுத்தெல்லாம் ஆதி பகவன் முதற்றே உலகு"

பெற்ற தாய், பிறந்த பொன்னாடு, தாய்மொழி தமிழ் என்றும் மறவாதே

# தமிழ் நெடுங் கணக்கு

## தமிழ் எழுத்துக்கள் - 247

### உயிர் எழுத்துக்கள்-12

அ ஆ இ ஈ உ ஊ

எ ஏ ஐ ஒ ஓ ஔ

### மெய் எழுத்துக்கள்-18

க் ங் ச் ஞ் ட் ண் த் ந் ப் ம் ய் ர் ல் வ் ழ் ள் ற் ன்

### உயிர் மெய் எழுத்துக்கள்-216

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| க | கா | கி | கீ | கு | கூ | கெ | கே | கை | கொ | கோ | கௌ |
| ங | ஙா | ஙி | ஙீ | ஙு | ஙூ | ஙெ | ஙே | ஙை | ஙொ | ஙோ | ஙௌ |
| ச | சா | சி | சீ | சு | சூ | செ | சே | சை | சொ | சோ | சௌ |
| ஞ | ஞா | ஞி | ஞீ | ஞு | ஞூ | ஞெ | ஞே | ஞை | ஞொ | ஞோ | ஞௌ |
| ட | டா | டி | டீ | டு | டூ | டெ | டே | டை | டொ | டோ | டௌ |
| ண | ணா | ணி | ணீ | ணு | ணூ | ணெ | ணே | ணை | ணொ | ணோ | ணௌ |
| த | தா | தி | தீ | து | தூ | தெ | தே | தை | தொ | தோ | தௌ |
| ந | நா | நி | நீ | நு | நூ | நெ | நே | நை | நொ | நோ | நௌ |
| ப | பா | பி | பீ | பு | பூ | பெ | பே | பை | பொ | போ | பௌ |
| ம | மா | மி | மீ | மு | மூ | மெ | மே | மை | மொ | மோ | மௌ |
| ய | யா | யி | யீ | யு | யூ | யெ | யே | யை | யொ | யோ | யௌ |
| ர | ரா | ரி | ரீ | ரு | ரூ | ரெ | ரே | ரை | ரொ | ரோ | ரௌ |
| ல | லா | லி | லீ | லு | லூ | லெ | லே | லை | லொ | லோ | லௌ |
| வ | வா | வி | வீ | வு | வூ | வெ | வே | வை | வொ | வோ | வௌ |
| ழ | ழா | ழி | ழீ | ழு | ழூ | ழெ | ழே | ழை | ழொ | ழோ | ழௌ |
| ள | ளா | ளி | ளீ | ளு | ளூ | ளெ | ளே | ளை | ளொ | ளோ | ளௌ |
| ற | றா | றி | றீ | று | றூ | றெ | றே | றை | றொ | றோ | றௌ |
| ன | னா | னி | னீ | னு | னூ | னெ | னே | னை | னொ | னோ | னௌ |

### ஆய்த எழுத்து-1 (ஃ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விவேகா அச்சகம் 269-1994, 264-2715

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org